084/DD/19

T.C. 03

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SURVEY DEPARTMENTAL TEST – DRAUGHTSMAN TEST – PAPER – I

(Without Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

### *IMPORTANT INSTRUCTIONS*

### OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 100 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 100 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best**.

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. Printing and Publication of village maps are done in

(A) National Informatic centre
(B) Central survey office
(C) Survey of India
(D) Government of Tamilnadu

———— அலுவலகத்தில் கிராம வரைபடங்கள் அச்சிட்டு வெளியீடல் பணி மேற்கொள்ளப்படுகிறது.

(A) தேசிய தகவல் மையம்
(B) மத்திய நில அளவை அலுவலகம்
(C) சர்வே ஆப் இந்தியா
(D) தமிழ்நாடு அரசு

2. An ———— is a bend or corner formed by two straight lines meeting each other.

(A) angle
(B) distance
(C) bearing
(D) point

ஒரு ———— இரண்டு நேர்கோடுகள் ஒன்றுக்கொன்று சந்திப்பதால் உருவாக்கப்பட்ட வளைவு அல்லது மூலையானது.

(A) கோணம்
(B) தூரம்
(C) பேரிங்
(D) புள்ளி

3. In traverse plotting under metric conversion a full sheet will contain

(A) 50 squares
(B) 20 squares
(C) 100 squares
(D) 75 squares

மெட்ரிக் மாற்றத்தின் கீழ் டிராவர்ஸ் வரைவு செய்யும் போது ஒரு முழு தாள் ———— கொண்டிருக்கும்.

(A) 50 சதுரங்கள்
(B) 20 சதுரங்கள்
(C) 100 சதுரங்கள்
(D) 75 சதுரங்கள்

4. Who will do technical scrutiny in the Taluk offices regarding subdivision files?

(A) Senior Draftsman
(B) Head Draftsman
(C) Technical Manager
(D) Land records Draftsman

வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு மனுக்களை ———— ரால் தொழில்நுட்ப கூறாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

(A) முதுநிலை வரைவாளர்
(B) தலைமை வரைவாளர்
(C) தொழில்நுட்ப மேலாளர்
(D) வட்ட ஆவண வரைவாளர்

5. The instrument used to measure cutting points and offsets in a straight line known as

(A) Compass (B) Protractor

(C) Cross staff (D) Flag

ஒரு நேர் கோட்டில் வெட்டளவு மற்றும் குத்தளவுகள் எடுக்க பயன்படுத்தும் கருவி

(A) காம்பஸ் (B) கோணமானி

(C) நேர்கோணக்கட்டை (D) கொடி

6. If the angle between the two lines is less than 90 degree then the angle is called

(A) Obtuse angle (B) Right angle

(C) Acute angle (D) Horizontal angle

இரண்டு கோடுகளுக்கு இடைப்பட்ட கோணம் 90 டிகிரிக்கு குறைவாக இருந்தால் அது ———— எனப்படும்.

(A) விரிகோணம் (B) செங்கோணம்

(C) குறுங்கோணம் (D) கிடைமட்ட கோணம்

7. New Subdivisions and new subdivision changes in urban area will be carried out in the survey records by

(A) Town sub inspector of survey (B) Senior Draftsman

(C) Head Draftsman (D) Deputy Tahsildar

நகர புறங்களில் புதிய உட்பிரிவு மற்றும் புதிய உட்பிரிவு மாறுதல்கள் நில அளவை ஆவணங்களில் ———— மூலம் மாறுதல் மேற்கொள்ளப்படுகிறது.

(A) நில அளவை நகர சார் ஆய்வாளர் (B) முதுநிலை வரைவாளர்

(C) தலைமை வரைவாளர் (D) துணை வட்டாட்சியர்

8. If the angle between the two lines are greater than 90 degree then the angle is called as

(A) Horizontal angle (B) Right angle

(C) Acute angle (D) Obtuse angle

இரண்டு கோடுகளுக்கு இடைப்பட்ட கோணம் 90 டிகிரிக்கு மேல் இருந்தால் அது ———— எனப்படும்.

(A) கிடைமட்ட கோணம் (B) செங்கோணம்

(C) குறுங்கோணம் (D) விரிகோணம்

9. Details like Area, classification, wet, dry, poramboke of the entire village is recorded, survey numbers wise in this ———— register.

(A) A Register
(B) Chitta
(C) Village map
(D) Land register

புல எண் வாரியாக கிராமத்தின் மொத்த பரப்பு நஞ்சை, புஞ்சை, புறம்போக்கு, முதலிய விவரங்கள் பதியப்பட்டிருக்கும் பதிவேடு

(A) அ பதிவேடு
(B) சிட்டா
(C) கிராம வரைபடம்
(D) நிலப்பதிவேடு

10. The block of wood on cross staff measures about

(A) 12 cm square
(B) 10 cm square
(C) 14 cm square
(D) 20 cm square

நேர் கோணக்கட்டையில் உள்ள மரக்கட்டையின் அளவு

(A) 12 செ.மீ. சதுரம்
(B) 10 செ.மீ. சதுரம்
(C) 14 செ.மீ. சதுரம்
(D) 20 செ.மீ. சதுரம்

11. 20 metre chain comprising of 100 links each link denotes

(A) 0.1 metre
(B) 0.4 metre
(C) 0.3 metre
(D) 0.2 metre

100 இணைப்புகள் கொண்ட 20 மீட்டர் சங்கிலியில் ஒவ்வொரு இணைப்பும் ———— மீட்டர் குறிக்கிறது.

(A) 0.1 மீட்டர்
(B) 0.4 மீட்டர்
(C) 0.3 மீட்டர்
(D) 0.2 மீட்டர்

12. The stone register should be prepared after the stone have been numbered in the ———— maps.

(A) village
(B) taluk
(C) block
(D) district

———— வரைபடங்களில் கற்களுக்கு வரிசை எண்கள் வழங்கப்பட்ட பிறகு மட்டுமே கல் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும்.

(A) கிராம
(B) வட்ட
(C) பிளாக்
(D) மாவட்ட

13. Each chain is provided with 10 Arrows made of stout iron wire about ———— in length.

(A) 30 cm (B) 100 cm

(C) 50 cm (D) 200 cm

ஒவ்வொரு சங்கிலிக்கும் ———— நீளம் கொண்ட ஒரு மொத்தமான இரும்பு கம்பி மூலம் 10 அம்புகள் வழங்கப்படுகிறது.

(A) 30 செ.மீ. (B) 100 செ.மீ.

(C) 50 செ.மீ. (D) 200 செ.மீ.

14. In Taluk account Maintenance, the register of encroachments on Government and city corporation public lands are entered in ————

(A) Register No.12 (Form No.40) (B) Register No.13 (Form No.41)

(C) Register No.3 (Form No.14) (D) Register No.11 (Form No.24)

வட்ட கணக்கு பராமரிப்பில், அரசு மற்றும் நகராட்சி பொது நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் ———— பதிவு செய்யப்படுகிறது.

(A) பதிவேடு எண். 12 (படிவம் எண். 40) (B) பதிவேடு எண். 13 (படிவம் எண். 41)

(C) பதிவேடு எண். 3 (படிவம் எண். 14) (D) பதிவேடு எண். 11 (படிவம் எண். 24)

15. Offset pole is generally ———— in length.

(A) 4 metres (B) 6 metres

(C) 2 metres (D) 5 metres

ஆப்செட் போல் பொதுவாக ———— நீளம் கொண்டது.

(A) 4 மீட்டர்கள் (B) 6 மீட்டர்கள்

(C) 2 மீட்டர்கள் (D) 5 மீட்டர்கள்

16. ———— stone are the marks set up at village tri junctions.

(A) second class (B) fourth class

(C) first class (D) third class

———— கற்கள் கிராம முச்சந்தியில் நடப்படுகிறது.

(A) இரண்டாம் வகை (B) நான்காம் வகை

(C) முதல் வகை (D) மூன்றாம் வகை

17. Surveying the field boundaries by equalizing the bends are called as

(A) stepping of bends
(B) plotting
(C) ranging
(D) equalization of bends

புல எல்லைகளில் உள்ள வளைவுகளை சமன் செய்து அளப்பதற்கு ———— என்று பெயர்.

(A) ஸ்டெப்பிங் ஆப் பெண்ட்ஸ்
(B) பிளாட்டிங்
(C) ரேஞ்சிங்
(D) வளைவுகளை சமன் செய்தல்

18. A portion of a land acquired under the Land Acquisition Act for a street, is sold by the ———— to a private person.

(A) Secretary
(B) Municipal council
(C) Chairman
(D) Assistant

நில எடுப்பு சட்ட பிரிவின் கீழ் தெருவிற்காக கையகப்படுத்தப்படும் ஒரு நிலத்தின் பகுதியை ———— ஆல் தனி நபருக்கு விற்கப்படும்.

(A) செயலாளரால்
(B) நகராட்சி மன்றத்தால்
(C) தலைவரால்
(D) உதவியாளரால்

19. ———— are placed at the end of G lines which do not coincide with the field tri junction.

(A) field stones
(B) kandam stone
(C) bi junction stone
(D) tri junction stone

புல முச்சந்தி அல்லாத மற்ற ஜி லைன் சேரும் முனைகளில் ———— நடப்படுகின்றன.

(A) புல எல்லை கற்கள்
(B) கண்டம் கற்கள்
(C) பை ஜங்சன் கற்கள்
(D) டிரை ஜங்சன் கற்கள்

20. Parallel ruler usually in use is ———— long.

(A) 10 centimeters
(B) 15 centimeters
(C) 20 centimeters
(D) 25 centimeters

பொதுவாக பயன்படுத்தப்படும் பேரலல் ரூலர் ———— அளவு ஆகும்.

(A) 10 சென்டிமீட்டர்
(B) 15 சென்டிமீட்டர்
(C) 20 சென்டிமீட்டர்
(D) 25 சென்டிமீட்டர்

21. In town villages the actual area of the subdivision and of the whole field will be computed by the ————.

(A) Tahsildar (B) Zonal Deputy Tahsildar

(C) Town sub inspector of survey (D) Revenue Inspector

நகர்ப்புற கிராமங்களில் உள்ள உட்பிரிவு மற்றும் முழு புலத்தின் உண்மையான பரப்பு ———— கணக்கிடப்படுகிறது.

(A) வட்டாட்சியரால் (B) மண்டல துணை வட்டாட்சியரால்

(C) நில அளவை நகர சார் ஆய்வாளரால் (D) வருவாய் ஆய்வாளரால்

22. In ———— method the diagonal line should not cross each other.

(A) Diagonal and Offset (B) Triangulation

(C) Ranging (D) Traverse

———— முறையில் மூலைவிட்ட ஒன்றுக்கு மேல் ஒன்று செல்லக்கூடாது.

(A) மூலைவிட்ட மற்றும் குத்தளவு முறை (B) சாதாரண முக்கோணமுறை

(C) ரேஞ்சிங் (D) டிராவர்ஸ்

23. The straight line joining the opposite angles of a quadrilateral is called as ————.

(A) Hypotenuse (B) Side

(C) Diagonal (D) Perpendicular

ஒரு நாற்கரத்தின் எதிரெதிர் கோணங்களில் சேரும் நேர் கோடு ———— என்று அழைக்கப்படுகிறது.

(A) கர்ணம் (B) பக்கம்

(C) மூலைவிட்டம் (D) செங்குத்து

24. ———— is the process of dividing a piece of land into triangles.

(A) mapping (B) traverse

(C) triangulation (D) ranging

ஒரு பகுதி நிலத்தை முக்கோணமாக உட்பிரிவு மேற்கொள்ள ———— முறை பயன்படுத்தப்படுகிறது.

(A) மேப்பிங் (B) டிராவர்ஸ்

(C) சாதாரண முக்கோணம் (D) ரேஞ்சிங்

25. In Taluk Office, copy application register is maintained by

(A) senior draftsman
(B) land records draftsman
(C) surveyor
(D) taluk deputy surveyor

வட்டாட்சியர் அலுவலகத்தில், நகல் மனு பதிவேடு யாரால் பராமரிக்கப்படுகிறது.

(A) முதுநிலை வரைவாளர்
(B) வட்ட ஆவண வரைவாளர்
(C) நிலஅளவர்
(D) துணை வட்ட சார் ஆய்வாளர்

26. ————— is the area tolerance limit for area correction.

(A) 2%
(B) 3%
(C) 5%
(D) 4%

பரப்பு திருத்தத்திற்கு அதிகபட்ச வரம்பு

(A) 2%
(B) 3%
(C) 5%
(D) 4%

27. In survey boundaries act of 1923 which act gives the rights to survey officer to carry out the survey in the prescribed manner.

(A) Section 5
(B) Section 6
(C) Section 7
(D) Section 8 (1)

நில அளவை எல்லை சட்டம் 1923 சட்டத்தில் நில அளவை பணிகளை செய்யும் அதிகாரம் அளிக்கும் சட்டபிரிவு எது?

(A) சட்டபிரிவு 5
(B) சட்டபிரிவு 6
(C) சட்டபிரிவு 7
(D) சட்டபிரிவு 8 (1)

28. In simple triangulation method the ————— is the only instrument required.

(A) chain
(B) rod
(C) stick
(D) arrow

சாதாரண முக்கோண முறையில் பயன்படுத்தப்படும் ஒரே கருவி.

(A) சங்கிலி
(B) கம்பம்
(C) குச்சி
(D) குத்தூசி

29. In 8 A the incorporation of changes in the village set of records should be done only after getting sanction orders by

(A) Assistant
(B) Field Assistant
(C) Tahsildar
(D) Deputy Tahsildar

———— 8A உத்தரவு பெற்ற பின்னரே கிராம கணக்குகளில் உட்பிரிவு மாறுதல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) உதவியாளர்
(B) புல உதவியாளர்
(C) வட்டாட்சியர்
(D) துணை வட்டாட்சியர்

30. The imaginary lines drawn round the earth and passing through the poles are called

(A) Declination
(B) Meridians
(C) The zenith
(D) Equator

பூமியை சுற்றி துருவங்களின் வழியாக செல்லும்படி வரையப்படும் கற்பனை கோட்டிற்கு ———— என்று பெயர்.

(A) டெக்கிலிநேஷன்
(B) மெரிடியன்ஸ்
(C) வானுச்ச புள்ளி
(D) பூமத்தியரேகை

31. When changes are made in traverse, angles and distance or when fresh traverse are run for any reason, the work should be checked by the

(A) Deputy Inspector of survey
(B) Zonal Deputy Tahsildar
(C) Tahsildar
(D) Senior Draftsman

ஏதேனும் காரணங்களுக்காக டிராவர்ஸ் கோணங்கள் மற்றும் அளவுகள், அல்லது புதிதாக டிராவர்ஸ் கணக்கிடப்படும் போது ஏற்படும் மாற்றங்கள் ———— ஆல் சரிபார்க்கப்பட வேண்டும்.

(A) நில அளவை வட்டத்துணை ஆய்வாளர்
(B) மண்டல துணை வட்டாட்சியர்
(C) வட்டாட்சியர்
(D) முதுநிலை வரைவாளர்

32. Bearing Means

(A) Greenwitch time
(B) Angle of a station
(C) Traverse line
(D) True north of a station

பேரீங் என்பது

(A) கீரின்விச் டைம்
(B) எங்கீல் ஆப் எ ஸ்டேசன்
(C) டிராவர்ஸ் லைன்
(D) நிலையத்தின் உண்மையான வடக்கு

33. The ———— is responsible for the maintenance of all theodolite and chain survey stations in urban areas.

(A) Senior Draftsman
(B) Assistant Director
(C) Inspector
(D) Town sub inspector of Survey

நகர பகுதிகளில் உள்ள அனைத்து தியோடலைட் மற்றும் சங்கிலி நிலையங்கள் பராமரிப்பதற்கு ———— பொறுப்பு அலுவலர் ஆவார்.

(A) முதுநிலை வரைவாளர்
(B) உதவி இயக்குநர்
(C) ஆய்வாளர்
(D) நில அளவை நகர துணை சார் ஆய்வாளர்

34. By using this option the user can drag the text in the tippan to the desired position.

(A) Move Text
(B) Move Right
(C) Move Image
(D) Move Row

———— முறையை பயன்படுத்தி புல எல்லை கோடுகள் மற்றும் உட்பிரிவு கோடுகளின் அளவுகளை எங்கு வேண்டுமோ அங்கு கொண்டு செல்லலாம்.

(A) மூவ் டெக்ஸ்ட்
(B) மூவ் ரயிட்
(C) மூவ் இமேஜ்
(D) மூவ் ரோ

35. A four sided figure with different side measurements and different angles are called as

(A) Trapezium
(B) Square
(C) Quadrilateral
(D) Rectangle

வெவ்வேறு பக்க அளவீடுகள் மற்றும் வெவ்வேறு கோணங்களைக் கொண்டு நான்கு பக்க உருவங்கள் ———— என அழைக்கப்படுகிறது.

(A) டிரப்பிசியம்
(B) சதுரம்
(C) நாற்கரமாக
(D) செவ்வகம்

36. The ———— is a plane cutting the celestial sphere at 90 degree from the Zenith.

(A) Celestial
(B) Horizon
(C) Quadrilateral
(D) Latitude

வானுச்ச புள்ளியிலிருந்து 90 டிகிரி வானியியல் கோளத்தை வெட்டுகிற கோட்டுக்கு ———— என்று பெயர்.

(A) வானியியல்
(B) வான விளிம்பு
(C) நாற்கரமாக
(D) அட்சரேகை

37. In Diagonal and offset method ———— are used

(A) chain alone
(B) cross-staff alone
(C) arrows
(D) chain and cross-staff

மூலைவிட்ட முக்கோண முறையில் ———— பயன்படுத்தப்படுகிறது.

(A) சங்கிலி மட்டும்
(B) நேர்கோணக்கட்டை மட்டும்
(C) குத்தூசி
(D) சங்கிலி மற்றும் நேர் கோணக்கட்டை

38. For formation of new survey field the extend of area adopted for wet land is ————.

(A) 2 hectares
(B) 100 hectares
(C) 25 hectares
(D) 50 hectares

நில அளவை புலங்கள் புதியதாக அமைக்கும் போது புஞ்சை நிலத்தை நிர்ணயிக்கப்பட்ட பரப்பளவு வரம்பு எவ்வளவு

(A) 2 ஹெக்டேர்கள்
(B) 100 ஹெக்டேர்கள்
(C) 25 ஹெக்டேர்கள்
(D) 50 ஹெக்டேர்கள்

39. "A" register of Government and Municipal lands should be maintained in

(A) Form I
(B) Form IV
(C) Form II
(D) Form V

அரசு மற்றும் நகராட்சி பகுதிகளின் "அ" பதிவேடு ———— ல் பராமரிக்கப்படுகிறது.

(A) படிவம் – I
(B) படிவம் – IV
(C) படிவம் – II
(D) படிவம் – V

40. The process of finishing village map and computing its area is called

(A) "A" process
(B) "B" process
(C) "H" process
(D) "F" process

கிராமப்படம் வரைந்து முடித்து பரப்பு கணிக்கும் முறைக்கு ———— என்று பெயர்.

(A) "A" பணி
(B) "B" பணி
(C) "H" பணி
(D) "F" பணி

41. In collabland software which option will be used to create a thatched house in the tippan

(A) insert (B) paste

(C) symbol (D) copy

கொலாப்லேண்ட் மென்பொருள் பயன்படுத்துபவர் எந்த கட்டளை உதவியுடன் வரைபடத்தில் கூரை வீடு வரைவு செய்ய முடியும்

(A) இன்சர்ட் (B) பெஸ்ட்

(C) சிம்பல் (D) காப்பி

42. In 'A' register column (3) Lands solely owned by the Government are symbolically written as

(A) H (B) F

(C) G (D) E

"அ" பதிவேட்டில் களம் 3ல் அடையாளபூர்வமாக அரசாங்க நிலங்கள் என்பதை —————— என குறிக்கப்பட்டிருக்கும்.

(A) H (B) F

(C) G (D) E

43. The traverse of Khandam circuits will be set up in

(A) form No.7 (B) form No.8

(C) form No.9 (D) form No.20

கண்டம் சுற்றில் உள்ள டிராவர்ஸ் —————— பதியப்படுகிறது.

(A) படிவம் எண் 7 (B) படிவம் எண் 8

(C) படிவம் எண் 9 (D) படிவம் எண் 20

44. Angle for a straight line is

(A) 90° (B) 180°

(C) 360° (D) 270°

ஒரு படுக்கை கோட்டை வரைந்தால் உண்டாகும் கோணம்

(A) 90° (B) 180°

(C) 360° (D) 270°

45. A line is a figure bounded by ———— arcs of a circles.

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

ஒரு வட்டம் ஒரு வட்டாரத்தின் ———— வட்டாரங்களாக வரையப்பட்ட ஒரு உருவமாகும்.

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

46. After serving 9 (2) notices to pattadhars, objections if any regarding piece of land should be given within a period of

(A) 1 month (B) 6 months

(C) 12 months (D) 3 months

9 (2) அறிவிப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து ————, நிலத்தில் வேறுபாடுகள் இருப்பின் பட்டாதாரர்கள் ஆட்சேபனை மனு வழங்கலாம்.

(A) 1 மாதத்திற்குள் (B) 6 மாதத்திற்குள்

(C) 12 மாதத்திற்குள் (D) 3 மாதத்திற்குள்

47. The ———— is a great circle formed in celestial sphere by the extension of the Meridian plane.

(A) Celestial meridian (B) Zenith

(C) Horizon (D) Celestial sphere

பூமியில் மெரிடியனை நீட்டுவதால் வானியல் கோளத்தில் உருவாக்கப்படும் ஒரு பெரு வட்டத்திற்கு ———— என்று பெயர்.

(A) வானியல் மெரிடியன் (B) வானுச்ச புள்ளி

(C) வான விளிம்பு (D) வானியல் கோளம்

48. The subdivision in a field should be numbered from

(A) North-West to South-East (B) West

(C) South (D) North-East to South-West

ஒரு புலத்தில் ஏற்படும் உட்பிரிவுகள் ———— பகுதியிலிருந்து வரிசைபடுத்தப்பட வேண்டும்.

(A) வடமேற்க்கிலிருந்து தென்கிழக்கு (B) மேற்கு

(C) தெற்கு (D) வடகிழக்கிலிருந்து தென்மேற்கு

49. The Collabland software is developed under ———— platform.

(A) Fox pro
(B) Visual basic
(C) Oracle
(D) Java

கொலாப்லேண்ட் மென்பொருள் ———— மேடையில் அமைக்கப்பட்டது.

(A) பாக்ஸ்ப்ரோ
(B) விசுவல் பேசிக்
(C) ஆரக்கில்
(D) ஜாவா

50. 1 Square Kilometer =

(A) 10 Hectares
(B) 20 Hectares
(C) 100 Hectares
(D) 50 Hectares

1 சதுர கிலோமீட்டர் =

(A) 10 ஹெக்டேர்கள்
(B) 20 ஹெக்டேர்கள்
(C) 100 ஹெக்டேர்கள்
(D) 50 ஹெக்டேர்கள்

51. When a survey has been ordered, the 6 (1) notification should be affixed in ———— of the village.

(A) Houses
(B) Chavadi
(C) Schools
(D) Play ground

புதிதாக நில அளவை ஆணையிட்ட பின் அந்த கிராமத்தில் உள்ள ———— பகுதிகளில், 6 (1) விளம்பரம் ஒட்டப்பட வேண்டும்.

(A) வீட்டு
(B) சாவடி
(C) பள்ளி
(D) விளையாட்டு மைதானத்தின்

52. In urban areas the town sub inspector of survey should maintain two registers in ———— prescribed.

(A) "Form 'C' and Form D"
(B) "Form 'A' and Form B"
(C) "Form 'E' and Form F"
(D) "Form 'G' and Form H"

நகராட்சி பகுதிகளில், நில அளவை நகர சார் ஆய்வாளரால் பராமரிக்கப்பட வேண்டிய இரண்டு பதிவேடுகள்

(A) "படிவம் 'C' மற்றும் படிவம் D"
(B) "படிவம் 'A' மற்றும் படிவம் B"
(C) "படிவம் 'E' மற்றும் படிவம் F"
(D) "படிவம் 'G' மற்றும் படிவம் H"

53. In traverse plotting the stations are examined and inked

(A) blue
(B) red
(C) black
(D) green

டிராவர்ஸ் வரைவு செய்யும் போது நிலையங்களை ஆய்வு செய்து ———— நிறத்தினால் மையிட வேண்டும்.

(A) நீலம்
(B) சிவப்பு
(C) கருப்பு
(D) பச்சை

54. Measurement of angles and distances from one theodolite station to another is called as

(A) rectangular co-ordinates
(B) traverse
(C) perpendicular
(D) meridian

ஒரு தியோடலைட் நிலையத்திலிருந்து இன்னொரு நிலையத்தின் கோணம் மற்றும் தூரங்களை அளவீடு செய்ய ———— என்று அழைக்கப்படும்.

(A) செங்கோண அச்சு தூரங்கள்
(B) டிராவர்ஸ்
(C) செங்குத்து
(D) மெரிடியன்

55. The permanent village register, with survey field number details in 12 columns is called as

(A) A register
(B) Chitta
(C) Village map
(D) Land register

சர்வே புல எண் வாரியாக விபரங்கள் 12 பத்திகள் கொண்ட நிலையான கிராம பதிவேடு எது?

(A) அ பதிவேடு
(B) சிட்டா
(C) கிராம வரைபடம்
(D) நிலப்பதிவேடு

56. ———— is the point in the celestial sphere vertically above the observers position.

(A) declination
(B) meridian
(C) the zenith
(D) equator

கணிப்பவர் நிலைக்கு நேர் மேலே வானியியல் கோளத்தில் உள்ள புள்ளிக்கு ———— என்று பெயர்.

(A) டெக்கிலிநேசன்
(B) மெரிடியன்
(C) வானுச்சபுள்ளி
(D) பூமத்தியரேகை

57. The most accurate method of refixing a missing field trijunction is by

(A) FMS
(B) NOS
(C) NPD
(D) Simple Triangulation method

காணாமல் போன புல முச்சந்தி கற்களை மிகவும் துல்லியமான முறையில் புதுப்பிப்பதற்கு ———— முறை கணக்கீடு பயன்படுத்தப்படுகிறது?

(A) FMS
(B) NOS
(C) NPD
(D) சாதாரண முக்கோண முறை

58. Town survey register that deals with encroachments are maintained in

(A) Form No.IV
(B) Form No.V
(C) Form No.VI
(D) Form No.VIII

நகர்ப்புற பதிவேட்டில் ஆக்கிரமிப்புகள் ————ல் பராமரிக்கப்படுகிறது.

(A) படிவம் எண் IV
(B) படிவம் எண் V
(C) படிவம் எண் VI
(D) படிவம் எண் VIII

59. ———— should be added to the apparent altitude in order to obtain the true altitude.

(A) Refraction
(B) Parallax
(C) Mean Observed Altitude
(D) Declination

உண்மையான ஆல்டிடியூட் (Altitude) அறிய அபெரென்ட் ஆட்டிடியூட் (apparent altitude) உடன் ———— சை பெறுக்க வேண்டும்.

(A) ரிபிராக்சஷ்
(B) பாரல்ஆக்ஸ்
(C) மீன்அப்சர்வுடு ஆல்ட்டிடியூடு
(D) டிக்கிலிநேசன்

60. In maintenance work the maximum tolerance limit allowed for measurement error is ———— for a distance of 5 chains.

(A) 2 links
(B) 15 links
(C) 5 links
(D) 4 links

பராமரிப்பு பணியில் ஐந்து சங்கிலி தூரத்திற்கு அதிகபட்ச அளவு பிழையின் உச்ச வரம்பு ———— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(A) 2 லிங்ஸ்
(B) 15 லிங்ஸ்
(C) 5 லிங்ஸ்
(D) 4 லிங்ஸ்

61. In Taluk office, the permanent registers regarding survey should be kept under safe custody of

(A) Tahsildar
(B) Zonal Deputy Tahsildar
(C) Assistant Director
(D) District Revenue Officer

வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவை தொடர்பான நிரந்தர பதிவேடுகளை ———— பாதுகாப்பில் வைக்க வேண்டும்.

(A) வட்டாட்சியர்
(B) மண்டல துணை வட்டாட்சியர்
(C) உதவி இயக்குநர்
(D) மாவட்ட வருவாய் அலுவலர்

62. The square root of 484 is

(A) 22
(B) 32
(C) 12
(D) 26

484ன் வர்க்க மூலம்

(A) 22
(B) 32
(C) 12
(D) 26

63. In Collabland software ———— option helps the users to delete all unused points for maps created from Total Station Points.

(A) Un-Used points
(B) Line
(C) Modify text
(D) Modify length

கொலாப்லேண்ட் மென்பொருளை பயன்படுத்துபவர் டோடல் ஸ்டேசன் மூலம் தயாரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து ———— கட்டளையைப் பயன்படுத்தி பயன்பாட்டிற்காகாத புள்ளிகளை வரைபடத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.

(A) அன் யூசடு பாயின்ஸ்
(B) லைன்
(C) மாடிபை டெக்ஸ்ட்
(D) மாடிபை லென்த்

64. ———— is measured westwards from meridian planes.

(A) Meridians
(B) Azimuth
(C) Traverse
(D) Zenith

மெரிடியன் தளத்திற்கு மேற்கு நோக்கியே ———— அமைக்கப்படுகிறது.

(A) மெரிடியன்
(B) அசிமத்
(C) டிராவர்ஸ்
(D) வானுச்ச புள்ளி

65. The field sketches drawn in collabland software can be stored in computer using ———— menu.

(A) exit (B) paste
(C) save (D) open

கொலாப்லேண்ட் மென்பொருள் மூலம் வரைவு செய்த புலப்படத்தை கணினியில் பதிவு செய்ய ———— என்ற மெனு பயன்படுத்தப்படுகிறது.

(A) எக்சிட் (B) பேஸ்ட்
(C) சேவ் (D) ஓபன்

66. 100 cents =

(A) 2 acre (B) 3 acre
(C) 4 acre (D) 1 acre

100 சென்ட் =

(A) 2 ஏக்கர் (B) 3 ஏக்கர்
(C) 4 ஏக்கர் (D) 1 ஏக்கர்

67. A sidereal day is divided into

(A) 24 hours (B) 12 hours
(C) 48 hours (D) 6 hours

ஒரு பக்கவாட்டு நாள் ———— நேரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

(A) 24 மணிகள் (B) 12 மணிகள்
(C) 48 மணிகள் (D) 6 மணிகள்

68. The process of demarcating field boundary in villages and fixing of stones are called as

(A) 'E' Process (B) 'F' Process
(C) 'B' Process (D) 'H' Process

கிராமபுறங்களில் புல எல்லைகள் நிர்ணயம் செய்து கற்கள் நடும் பணிக்கு ———— என்று பெயர்.

(A) 'E' செய்முறை (B) 'F' செய்முறை
(C) 'B' செய்முறை (D) 'H' செய்முறை

69. Assistant Director of Survey should inspect minimum of ———— fields in a month.

(A) 5
(B) 10
(C) 15
(D) 20

நிலஅளவை உதவி இயக்குநர் ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் ———— புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(A) 5
(B) 10
(C) 15
(D) 20

70. The length of the chain with 150 links is

(A) 50 metre
(B) 70 metre
(C) 30 metre
(D) 80 metre

150 இணைப்புகள் கொண்ட சங்கிலியின் நீளம்

(A) 50 மீட்டர்
(B) 70 மீட்டர்
(C) 30 மீட்டர்
(D) 80 மீட்டர்

71. ———— will be used for calculating area in F.M.B.

(A) Ruled paper
(B) Unruled sheet
(C) Rectangular paper
(D) Area square paper

எப்.எம்.பி. யில் பரப்பு கணிக்க ———— பயன்படுத்தப்படுகிறது.

(A) ரூள்டு பேப்பர்
(B) அன்ரூல்டு பேப்பர்
(C) ரெக்டேங்குளர் பேப்பர்
(D) ஏரியா ஸ்குவையர் பேப்பர்

72. The chain used in Cadastral town and street survey is

(A) 100 meter
(B) 200 meter
(C) 20 meter
(D) 50 meter

நகர அளவை மற்றும் தெரு அளவைக்கு பயன்படுத்தப்படும் சங்கிலியின் அளவு

(A) 100 மீட்டர்
(B) 200 மீட்டர்
(C) 20 மீட்டர்
(D) 50 மீட்டர்

73. The approximate area extent allowed for formation of Khandam boundaries are

(A) 80-160 hectares
(B) 40-80 hectares
(C) 160-320 hectares
(D) 320-640 hectares

கண்டம் எல்லைகள் அமைக்கும்போது தோராயமாக ———————— அளவு பரப்பளவில் அமைக்கப்படும்.

(A) 80-160 ஹெக்டேர்ஸ்
(B) 40-80 ஹெக்டேர்ஸ்
(C) 160-320 ஹெக்டேர்ஸ்
(D) 320-640 ஹெக்டேர்ஸ்

74. A Maintenance Field Surveyor will generally be in-charge of a

(A) Taluk
(B) District
(C) Firka
(D) State

பராமரிப்பு நில அளவின் பொறுப்பு பொதுவாக ———————— க் குட்பட்டதாக இருக்கும்.

(A) வட்டம்
(B) மாவட்டம்
(C) பிர்கா
(D) மாநிலம்

75. Demarcating the village boundary is departmentally known as

(A) B work
(B) D work
(C) A work
(D) C work

கிராம எல்லை நிர்ணயம் செய்யப்படுவதை துறை ரீதியாக ———————— என்று அழைக்கப்படுகிறது.

(A) B பணி
(B) D பணி
(C) A பணி
(D) C பணி

76. Field sketches drawn to a scale of fraction 1:1000, 1:2000, 1:5000 is termed as

(A) Representative fraction
(B) Co-ordinates
(C) Fraction
(D) Decimal

பின்னத்தில் 1:1000, 1:2000, 1:5000 என்ற பின்னமாக அளவுகளில் வரையப்படும் புல வரைபடங்கள் ———————— என அழைக்கப்படுகிறது.

(A) பிரதிநிதித்துவ பின்னம்
(B) அச்சுதூரங்கள்
(C) பின்னம்
(D) டெசிமல்

77. Fields drawn independently with sub-divisions and important details are termed as

(A) FMB (B) Chitta

(C) A Register (D) Tie Line

புலங்களின் உட்பிரிவுகள் மற்றும் விளக்கிகள் கொண்டு தனித்தனியாக வரையப்படும் வரைபடம் ———— என அழைக்கப்படுகிறது.

(A) எப்.எம்.பி. (B) சிட்டா

(C) அ பதிவேடு (D) டை லைன்

78. The office of the Joint Director of survey and Land Records, Chennai will be inspected by the ———— annually.

(A) Additional Director of Survey

(B) Regional Deputy Director of survey

(C) Technical Manager

(D) Director of Survey and settlement

வருடத்திற்கு ஒரு முறை ———— அவர்களால் சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(A) நில அளவை கூடுதல் இயக்குநர்

(B) நில அளவை மண்டல துணை இயக்குநர்

(C) தொழில்நுட்ப மேலாளர்

(D) இயக்குநர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம்

79. The size of class II field stones

(A) 90 c.m. × 30 c.m. × 45.0 c.m. (B) 30 c.m. × 7.5 c.m. × 7.5 c.m.

(C) 80 c.m. × 20 c.m. × 22.5 c.m. (D) 60 c.m. × 15 c.m. × 22.5 c.m.

இரண்டாம் தர புல எல்லை கற்களின் அளவு

(A) 90 செ.மீ. × 30 செ.மீ. × 45.0 செ.மீ. (B) 30 செ.மீ. × 7.5 செ.மீ. × 7.5 செ.மீ.

(C) 80 செ.மீ. × 20 செ.மீ. × 22.5 செ.மீ. (D) 60 செ.மீ. × 15 செ.மீ. × 22.5 செ.மீ.

80. Survey errors are classified into ———— types.

(A) 1 (B) 2

(C) 8 (D) 3

நில அளவை பிழைகள் எத்தனை வகை உள்ளது?

(A) 1 (B) 2

(C) 8 (D) 3

81. The formula used to check the value of measured angles in a closed circuit is

(A) $2n \times 90$ (B) $(2n + 4) \times 90$

(C) $(2n - 4) \times 90$ (D) $2n$

சுற்றுப்புலங்களின் கொடுக்கப்பட்ட கோண அளவுகளின் கூடுதல் சரியாக உள்ளதா என கண்டறிய உதவும் சூத்திரம்

(A) $2n \times 90$ (B) $(2n + 4) \times 90$

(C) $(2n - 4) \times 90$ (D) $2n$

82. How many distinct stages are there in all land acquisition?

(A) 2 (B) 8

(C) 16 (D) 4

நில எடுப்பு மேற்கொள்ளும்போது எத்தனை வித்தியாசமான நிலைகள் உள்ளன

(A) 2 (B) 8

(C) 16 (D) 4

83. In traverse plotting the sum of the Eastings must be equal to the sum of the

(A) Southings (B) Northings

(C) Westings (D) Centerings

டிராவர்ஸ் வரைவு மேற்கொள்ளும்போது கிழக்கு பகுதிகளின் கூடுதல் ————க்கு சமமமாக இருக்க வேண்டும்.

(A) தெற்கு பகுதி (B) வடக்கு பகுதி

(C) மேற்கு பகுதி (D) மத்திய பகுதி

84. In a village, newly formed field should be in continuation of ―――――― survey number.

(A) alphabetic
(B) first
(C) even number
(D) last

ஒரு கிராமத்தில் புதிதாக உருவாக்கப்படும் புலத்திற்கு அந்த கிராமத்தின் ―――――― புல எண்ணிற்கு அடுத்த புல எண் வழங்கப்பட வேண்டும்.

(A) அகர
(B) முதல்
(C) சம எண்
(D) கடைசி

85. The main circuit traverse should be connected with the ―――――― in Traverse survey.

(A) ETS
(B) GPS
(C) G.C.P.
(D) G.T. Station

டிராவர்ஸ் அளவையில் பெருஞ்சுற்று அளவுகள் ―――――― உடன் இணைக்கப்படுகிறது.

(A) ஈ.டி.எஸ்
(B) ஜி.பி.எஸ்
(C) ஜி.சி.பி.
(D) ஜி.டி.ஸ்டேசன்

86. Khandam should be numbered consecutively beginning at the ―――――― corner of the village.

(A) North east
(B) South west
(C) North west
(D) South east

கண்டம் ஆனது கிராமத்தின் ―――――― மூலையிலிருந்து தொடர் எண் வரிசைப்படுத்தப்பட வேண்டும்.

(A) வட கிழக்கு
(B) தென் மேற்கு
(C) வட மேற்கு
(D) தென் கிழக்கு

87. ―――――― is used to check the number of chains measured.

(A) tape
(B) theodolite
(C) offset pole
(D) arrows

அளவிடப்பட்ட சங்கிலியின் எண்ணிக்கையை சரிபார்க்க ―――――― பயன்படுத்தப்படுகிறது.

(A) டேப்
(B) தியோடலைட்
(C) ஆப்செட்போல்
(D) குத்தூசிகள்

88. When the lands are converted from double crop to single crop subdivisions should be made only if the area involved is

(A) above 50 ares (B) 100 ares

(C) not less than 40 ares (D) above 1 hectare

இரு சாகுபடியிலிருந்து ஒரு சாகுபடி நஞ்சைக்கு மாற்றப்படும் பொழுது தொடர்புடைய பரப்பு ஒரு ஏக்கருக்கு ———— குறையாமலிருந்தால் மட்டுமே உட்பிரிவு செய்யப்பட வேண்டும்.

(A) 50 ஏர்ஸ்க்கு மேல் (B) 100 ஏர்ஸ்

(C) 40 ஏர்ஸ்க்கு குறையாமல் (D) 1 ஹெக்டருக்கு மேல்

89. The difference between apparent (sun) and mean time is called as

(A) Refraction (B) Parallax

(C) Equation of time (D) Zenith

சூரியன் உதய நேரத்திற்கும் இடைநிலை சராசரி நேரத்திற்கும் உள்ள வித்தியாசம் ———— என அழைக்கப்படும்.

(A) ரிபிராக்சஷன் (B) பாரல்ஆக்ஸ்

(C) ஈக்குவேசன் ஆப் டைம் (D) வானுச்ச புள்ளி

90. ———— option is used to change the direction of the tippan.

(A) Undo (B) Redo

(C) Rotate (D) Auto fit

வரைவு செய்யப்பட்ட வரைபடத்தை தேவையான கோணத்திற்கு திருப்பிக்கொள்ள ———— என்ற கட்டளையை பயன்படுத்தப்பட வேண்டும்.

(A) அண்டு (B) ரீடு

(C) ரோடேட் (D) ஆட்டோ பிட்

91. Long narrow fields such as street and road should have a length of

(A) 100 m (B) 300 m

(C) 200 m (D) 400 m

தெரு மற்றும் சாலைகள் போன்ற நீண்ட குறுகிய புலங்கள் ———— இருக்க வேண்டும்.

(A) 100 மீ (B) 300 மீ

(C) 200 மீ (D) 400 மீ

92. In a closed circuit if '$n$' is 9 the total angle is?

(A) 1260 (B) 1220

(C) 1280 (D) 1240

சுற்றின் "$n$" மதிப்பு 9 என்றால் மொத்த கோணத்தின் மதிப்பு?

(A) 1260 (B) 1220

(C) 1280 (D) 1240

93. ———— is an instrument used for preparing FMB.

(A) Diagonal Scale (B) Vernier Scale

(C) Parallel Scale (D) Offset Scale

எப்.எம்.பி. தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவியாகும்

(A) மூலைவிட்ட அளவுகோல் (B) வெர்னியர் கோல்

(C) பேரலல் கோல் (D) ஆப்செட் கோல்

94. Application received to point out the boundaries of the fields are entered in

(A) 8 A register

(B) Copy application register

(C) F-line register

(D) Aquitence register

புல எல்லை அளவு குறித்து பெறப்படும் மனுக்கள் ———— பதிவேட்டில் பதியப்படுகிறது.

(A) 8 A பதிவேடு

(B) நகல் மனு பதிவேடு

(C) புல எல்லை பதிவேடு

(D) அறிதல் பதிவேடு

95. Block maps are also called as

(A) FMB
(B) Atlas
(C) Village map
(D) Taluk map

பிளாக் வரைபடங்கள் ———————— எனவும் அழைக்கப்படுகிறது.

(A) எப்.எம்.பி
(B) அட்லாஸ்
(C) கிராம வரைபடம்
(D) வட்ட வரைபடம்

96. Traverse computations are entered in

(A) Form No.5
(B) Form No.10
(C) Form No.15
(D) Form No.20

டிராவர்ஸ் கணக்கீடுகள் ————————ல் பதியப்படுகிறது.

(A) படிவம் எண்.5
(B) படிவம் எண்.10
(C) படிவம் எண்.15
(D) படிவம் எண்.20

97. ———————— command change the zoom scale mode to variable scale mode is collabland software.

(A) Zoom scale
(B) Double scale
(C) Half scale
(D) Variable scale

———————— என்ற கட்டளையை பயன்படுத்தி கொலாப்லேண்ட் மென்பொருளில் ஜூம் ஸ்கேல் முறையிலிருந்து வேரியபல் ஸ்கேல் முறைக்கு மாற்றம் செய்யலாம்.

(A) ஜீம் ஸ்கேல்
(B) டபுல் ஸ்கேல்
(C) ஆப் ஸ்கேல்
(D) வேரியபல் ஸ்கேல்

98. The subdivisions in town fields are measured by

(A) Deputy Inspector of survey (B) Senior Draftsman

(C) Town sub inspector of survey (D) Land Records Draftsman

நகரங்களில் உட்பிரிவு அளவைகள் ———— ஆல் மேற்கொள்ளப்படுகிறது.

(A) நில அளவை வட்ட துணை ஆய்வாளர் (B) முதுநிலை வரைவாளர்

(C) நில அளவை நகர துணை சார் ஆய்வாளர் (D) வட்ட ஆவண வரைவாளர்

99. The third type of Survey error is called

(A) angle error (B) measurement error

(C) area error (D) offset error

நல அளவை பிழைகளில் மூன்றாம் வகை பிழை ———— ஆகும்.

(A) கோண பிழை (B) அளவு பிழை

(C) பரப்பு பிழை (D) குத்தளவு பிழை

100. ———— of survey and Boundary act 1923 is the Appeal against the orders under section 9 or 10.

(A) Section 4 (1) (B) Section 6 (1)

(C) Section 11 (1) (D) Section 10 (1)

மேற்கண்ட பிரிவு 9 அல்லது 10ன் படி அறிவிக்கப்பட்ட முடிவுகள் மீது யாருக்கேனும் பாதிப்பு ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலருக்கு ———— நில அளவை எல்லை சட்டம் 1923ன் கீழ் மேற் முறையீடு செய்து கொள்ளலாம்.

(A) பிரிவு 4 (1) (B) பிரிவு 6 (1)

(C) பிரிவு 11 (1) (D) பிரிவு 10 (1)